உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சூட்டுக்கோலால் மாட்டிக்கொண்ட

ஸ்ரீமத். காசிகானந்த சுவாமியார்

கட்டுரையின்மேல் கட்டு.

இது

திருவாவடுதுறை ஆதீன சைவப்பிரசாரகர்,

தூத்துக்குடி

பொ. முத்தைய பிள்ளையால்,

கட்டவப்பெற்று.

தூத்துக்குடி

சைவப்பிரகாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1918.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சூட்டுக்கோலால் மாட்டிக்கொண்ட

ஸ்ரீமத். காசிகானந்த சுவாமியார்

கட்டுரையின்மேல் கடா.

இது

திருவாவடுதுறை ஆதீன சைவப்பிரசாரகர்,

தூத்துக்குடி

பொ. முத்தையபிள்ளையால்,

கடாவப்பெற்று,

தூத்துக்குடி

சைவப்பிரகாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1918.

உ

சிவமயம்.

சூட்டுக்கோலால் மாட்டிக்கொண்ட
ஸ்ரீமத். காசிகாநந்தசுவாமியார்
கட்டுரையின்மேல் கடா.

உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும் (திருக்குறள்)

"எண்பொருளவாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள்" காணும் அறிவுடையோரே!

கோவிலூர்மடத்தில் வசிக்கும் ஸ்ரீமத் காசிகாநந்த சுவாமியாரென்பார் ஸ்ரீமாந். சொக்கலிங்கச் செட்டியாரவர்கள் வெளியிட்ட தூர்வையாச கப்படலத்துக்கு மறுப்பாக எழுதிய "சூட்டுக்கோல்" என்னும் புத்தகம் கண்டனம். அது சைவசமயநிந்தை, சிவசாத்திரநிந்தை, சிவனடியார்நிந்தைகள் மலிந்து முன்னொடுபின்முரணித் தம்மனம்போனவாறு எழுதப்பட்டிருக்கிறது. அன்றென்பாருளராயின் ஈண்டுக்கூறும் கடாக்கட்கு நியாயமுறையில் விடைதருவாராக.

1. 9-முதல் 13-வது பக்கம்வரை

சீவ னென்னச் சிவனென்ன வேறில்லை
சீவ னார்சிவ னாரை யறிகிலர்
சீவ னார்சிவ னாரை யறிந்தபின்
சீவ னார்சிவ னாயிட் டிருப்பரே.

என்பது முதலிய பல செய்யுட்களைச் சுவாமியார் எடுத்துக்காட்டி 'மோக்ஷகாலத்தில் சிவனுக்குரிய எண்குணங்களும் ஜீவனுக்கு வந்து பொருந்துகின்றன" வென்றும், 39-வது பக்கத்தில்" தர்மி இரண்டினையும் பொய்யென்று கூறுவார்களாயின் ஐக்யம் எதற்குக் கூறுவார்கள். தர்மிகளுக்கு ஐக்கியமேயன்றி தர்மங்களுக்கு ஐக்யமின்றாம். தர்மம் அநித்தியமானவிடத்து தர்மி நித்தியமாயிருத்தல் கூடும்" என்றும் கூறிவிட்டு இக்கூற்றுக்கு மாறாக 40, 42-வது பக்கங்களில் இருவர் கூடுங்கலப்பிலே இன்பானுபவம் உண்டென்பதை மறுத்து, "ஒரோ ஸ்திரீக்கு மகளென்றும்,"

மனைவியென்றும், மாதாவென்றும், மாமியென்றும், மதினியென்றும், உபாதியின் வயத்தால் பலபெயர்கள் வருவதுபோன்று ஒரோசேதனத்திற்கு வியாபகத்தன்மையால் பிரமமென்றும், அந்தக்கரண உபாதியால் வரையப்பட்டிருத்தலிற் கூடஸ்தனென்றும் உபாதியால் வந்த இருபெயரே யன்றி உண்மையில் இருபொருள்கள் இலவாம். உண்மையில் இருபொருளிருந்து, அவற்றிற்கைக்யமாய சையோகசம்பந்தத்தினைக் கூறின் மோக்ஷம் மீண்டும் பிறப்புடை மோக்ஷமாம். சையோகம் அவ்வியாப்பிய விருத்தியாயிருந்து அநித்தியமாய் உளதாகலின் ஒருபொருளிற்குப் பிராந்தியினாற்றோற்றிய இரண்டாந்தன்மையினை நிவிர்த்தித்து ஒன்றாந்தன்மையினைத் "தத்துவமசி" மகாவாக்கியம் கூறுவதேயன்றி நண்பாது கூற்றுப்போன்று பிணைத்து வைத்திலவாம்" என்று கூறுகின்றனர். மேலே "சிவனுக்குரிய எண்குணங்கள் ஜீவனுக்குவந்து பொருந்துகின்றன" என்றதனானும், "தர்மி இரண்டினையும் பொய்யென்று கூறுவார்களாயின் ஐக்கியம் எதற்குக் கூறுவார்கள்" என்றதனானும் முத்தியிலும் இருபொருளுண்மை சித்திக்குமே? பின்னர் "உண்மையில் இருபொருளிருந்து அவற்றிற்கைக்கியங்கூறின் மோக்ஷம் மீண்டும் பிறப்புடை மோக்ஷமாம்" என்றது மேற்கூறியவற்றோடு முரணாகாதா? இன்னும் 25-வது பக்கத்தில் "பரமேசுவரனுக்குரிய குணங்கள் முத்திதசையிலும் தனக்கில்லா திருந்தும் இருப்பதாகப் பாவித்தலுமாய திருட்டுத்தொழில் இவர் மதத்தினர்க்கேயன்றி எம்மவர்க்கின்றாம்" என்கின்றனர். இதுவும் மேற்கூறியவற்றோடும் ஸ்ரீமத் அப்பய தீக்ஷிதரவர்கள் கருத்தோடும் மாறுபாடாகாதா? மாறுபடின் இவர் மதம் பின் யாவர்க்குத்தான் சம்மதம்?

2. "தத்துவமசி" மகாவாக்கியம் ஒன்றாந்தன்மையினைக் கூறுவதென்று 42-வது பக்கத்தில் கூறுகின்றனர். 10-வது பக்கத்தில் இவரால் எடுத்துக் காட்டப்பட்டிருக்கும்

தொம்பதந் தற்பதந் தோன்று மசிபத
நம்பிய சீவன் பரன் சிவனுய்கிற்கு
மம்பத மேலைச் சொரூபமா வாக்கியஞ்
செம்பொரு ளாண்டருள் சீர்நந்திதானே.

என்னும் திருமந்திரச் செய்யுளாலும், இதுபோன்ற பிறசெய்யுட்களாலும், ஜீவன், பரன், சிவன் என்னும் மூன்று பொருள்களை தத்துவமசிமகாவாக்கியம் கூறுகின்றது என்பது வெளிப்படை. திருமூலநாயனார் திருவாக்கிற்குமாறாக ஒன்றாந்தன்மையினையே தத்துவமசி உணர்த்துவ

தென்றல் எவ்வாறு பொருந்தும்? "அக்குழையன் இவனே" என்பது போன்று பொருள்தரும் விட்டுவிடாதலக்கணக்கு, முன்னர்ப்பாசத்தோடு கூடிப் பசுவாயிருந்தவனே இப்பொழுது பிரமத்தோடுகூடிப்பிரமமாயிருக் கின்றான் என்பது பொருளா? உண்மையில் பிரமத்தைத்தவிரப் பசுப் பொருள் இல்லையென்பது பொருளா? உண்மையில் பசுப்பொருள் இல்லை யாயின் திருமந்திரத்தில்.

"முத்தியில் அத்தன் முழுத்த வருட்பெற்று
தத்துவ சுத்தித் தலைப்பட்டுத் தன்பணி
மெய்த்தவஞ் செய்கை வினைவிட்டமெய்யுண்மைப்
பத்தியிலுற்றோர் பரானந்த போதரோ"

என்பதற்கு எப்பொருள் கூறுவர் இத்திருவாக்கினையே "அயரா அன்பின் அரன் கழல் செலும், எனச் சிவஞானபோதம் பதினோராம் சூத்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

இனி "ஒரே சேதனத்திற்கு வியாபகத்தன்மையால் பிரமமென் றும், அந்தக்கரண உபாதியால் வரையப்பட்டிருத்தலிற் கூடஸ்தனென் றும், உபாதியால் வந்த இருபெயரே யன்றி, உண்மையில் இருபொருள் களிலவாம்" என்கின்றனரே, ஒருசேதனஞ் சுத்தமாயிருந்து அந்தக்கரண உபாதியைக்கூடிற்றா? அசுத்தமாயிருந்து அந்தக்கரண உபாதியைக் கூடி ற்றா? சுத்தமாயிருந்து கூடிற்றெனின், எதற்காகக்கூடிற்று? எப்பொழுது கூடிற்று? உயிர்ஆணவமலத்தை அநாதியே கூடியவாறுபோல எனின், அது சுத்தப்பிரமமாகுமா? அநாதியேகூடிய உபாதியை தானேநீக்குதல் எவ்வாறுகூடும்? கூடுமாயின், முன்னரே நீக்கியிருக்கலாமே? உபாதியைக் கூடுதலும் பிரிதலும் இயல்பெனின், பிரிந்தபின்னரும் கூடுமென்றாகி, பிரிவதற்காகச் செய்யுஞ் செயல்களெல்லாம் வீண்செயல்களாயன்றோ முடியும்? சைவசித்தாந்தத்தில் ஆன்மா அநாதியே மலத்தைச்சார்ந்து பெத்தனாய் நின்று, பின்னர் குருகிருபையால் மலத்தினின்றும் நீங்கிச் சிவத்தைச்சார்ந்து முத்தனாகுமென்று கூறுதலால், மலத்தைச் சார்ந்து நின்ற உயிர் அதினின்றும் நீங்கியவாறுபோல சிவத்தைச்சார்ந்து நின்ற உயிரும் அதனினின்றும் நீங்காதா? நீங்குமாயின் சார்தற்காகச் செய்யும் செயல்களெல்லாம் வீண்செயல்தானே என்பீரேல், நன்றுவினாயினீர்; மலசத்திக்குக் கேடுண்டு, சிவசத்திக்குக் கேடின்று. மலசத்தியின் கேட் டினால் மலத்தினின்றும் நீங்கிய உயிர் சிவத்தைச்சாரும். சிவசத்திக்குக் கேடின்மையால் சிவத்தைச் சார்ந்த உயிர் மலத்தில் மீளுதலில்லை. இது எது போலுமெனின், ஏரிக்கரைக்குக் கேடுண்டு. கடற்கரைக்குக் கேடின்று; ஏரியின்கரை உடைந்தால் அங்குள்ள நீர் கடலைச் சாரும். கடற்கரைக்குக் கேடின்மையின் அதனைச் சார்ந்த நீர் ஏரிக்கு மீளுதலில்லாததுபோலும்

என்க. ஆதலின் இது கொண்டு நமது செயல் வீண்செயலில்லை யென்று தப்பித்துக் கொள்ளமுடியுமா? எல்லாம் பொய்யாயிருக்க பொய்யில் இத்துணைத் தர்க்கம் எதற்கெனின், இங்ஙனம் கூறுவது சூனியவாதமாகிய நிரீச்சுரவாத மாகுமன்றி ஆஸ்திக வாதமாகுமா?

இனி அசுத்தமாயிருந்து கூடிற்றெனின், அப்பொழுதும் நமது பிரமம் சுத்தப்பிரமமாகாதே. "ஊனாய் உயிரானாய்" "உணர்வும் அவனே உயிரும் அவனே" "சிவன்றான் பலபல சீவனுமாகி" என்பனவாதிய திருவாக்குக்களால், சிவனே உயிராயிற்று, உலகமாயிற்று என்னலாகாதோ எனின், ஆகாது. என்னை! எல்லாப் பொருள்களோடும் கலந்து நிற்கும் கலப்புத்தன்மையால் அதுவதுவாய் நிற்கும் நிலையும், பொருட்டன்மையால் அவற்றின் வேறாய் நிற்கும் நிலையுமென இருநிலைகள் சிவபெருமானுக்கு உண்டு. அவற்றுள், அதுவதுவாய் நிற்கும் நிலைபற்றி அவ்வாறு அருளிச் செய்தனர் ஆசிரியரென்க. இனியேனும் இவரும் இவர் சார்பினரும் திருமந்திரம் முதலிய திருவாக்குகளுக்குச் சைவசித்தாந்தப் பெரியாரிடம் பொருள் கேட்டு உண்மை உணர்வீர்களா?

இன்னும் 39-40வது பக்கங்களில் "மாணாக்கர்கட்கு அறிவுறுத்தற்குச் சீவன் முத்தித்தசையில், பிரமஞானிகள், பிரமத்தையநுபவிக்கின்றார்கள் என்று கூறியிருத்தலை யுணராது" எனவும், "ஒருபொருளிருக்குமிடத்தில், செய்தலும் செய்வித்தலுமுளவாமோ" எனவுங்கூறி, இவற்றைச் சாதிப்பதற்குத் தந்தலையில் மண்ணைவாரிப் போட்டுக்கொண்ட கதை யொன்றையுங் கூறுகின்றார். இதுவும் முத்திதசையில் இருபொருள் உண்டென்று மேற்கூறியதனோடு முரணாகாதா? அன்றியும் மாணாக்கர்கட்கு அறிவுறுத்தும் பொருள் உண்மையா? பொய்மையா? உண்மையாயின் அறிவுறுத்தற் பொருட்டு என்றது பயனில் கூற்றாயன்றோ முடியும்? பொய்மையாயின் பொய்யை உபதேசிப்பதற்கு ஆசிரியரும் வேண்டுமோ? இனி முத்தியில் ஒருபொருளே இருந்து தன்னைத் தானே அனுபவிக்குமென்றுகூறின் ஆன்மாச்சிரயதோஷ மாகாதா? அனுபவமென்பது சொல் மாத்திரையேயன்றி உண்மையில் இல்லையெனின்; அனுபவிப்பவனும் அனுபவிக்கப்படும் பொருளும் இல்லை யென்றாகிச் சூனியமாயன்றோ முடியும்? ஒருபொருள்தான் உண்டு; அனுபவமும் உண்டு என்று சாதிப்பதற்குத் தந்தலையில் மண்ணை வாரிப்போட்டுக்கொண்ட கதையினை நுணுகிய ஆராய்ச்சி இன்மையாற்கூறினர். என்னை? மண்ணைவாரிப் போட்டது கை. போடச்செய்தது மனம். போடப்பட்டது தலையாதலாலென்க. தலை அனுபவிக்கும் பொருளுக்கும், மண் அனுபவிக்கப்படும் பொருளுக்கும், கை அவ்வனுபவத்தைக் கூட்டுவிக்கும் பொருளுக்கும், மனம்கூட்டுவிக்கச்

செய்யும் பொருளுக்கும் உவமைகளாகுமென்பதைச் சிறுமகாரும் அறிவரோ? தருக்க ஞானத்தில் வல்லவர் போன்று தம்பட்டமடிக்குஞ் சாமியார் அறியாமைக்குக் காரணம் யாதோ?

3. 41-வது பக்கத்தில் "குயவனை ஈசுவானுக்கு உவமையாகக் கூறியிருக்கும் இடத்தினும், ஈசுவரன் பரிச்சின்னனுயும், கிஞ்சிச்ஞனுயும், சரீரியாயும் உளனென்பதற்கு உவமையென்று சொள்ளரேயன்றி நிமித்த காரணனுய் உளனென்பதற்கு மாத்திரம் உவமையென்று மறந்துங்கொள்ளார்" என்று கூறுகின்றனர். இவ்வாறு கொள்ளுகின்றாரென்பதை எவ்வாறு தெரிந்தனர்?

குசவன்றிருக்கையிலேற்றிய மண்ணைக்
குசவன் மனத்துற்றதெல்லாம் வனைவன்
குசவனைப் போலெங்கள் கோனந்தி வேண்டி
லசைவிலுலக மதுவிதுவாமே.

என்னும் திருமந்திரம் அநுக்கிரகம் குறித்து அருளிச்செய்யப்பட்டிருத்தலையும் நோக்காது மனம்போனவாறு கூறுதல் முறையாகுமா? குயவன் பரிச்சின்னனுயும் கிஞ்சிஞ்ஞனுயும் சரீரியாயுமிருத்தலால், அதுபோல உவமேயமும் இருக்கவேண்டுமென்று கூறினேமென்பரேல், ஒரே சேதனத்திற்கு உவமை காட்டிய ஒரே ஸ்திரீயும், வியாபகமாயும், பேரறிவு உடையவளாயும், அசரீரியாயும் உள்ளாள் என்று கொள்வாரா? அல்லது இவர் பிரமமாகிய ஒரே சேதனம், பரிச்சின்னமாயும், கிஞ்சிஞ்ஞத்வமாயும் சரீரியாயும் உளதென்று ஒப்புக்கொள்வாரா?

இன்னும் 39-வது பக்கத்தில் "ஜீவன் என்னுஞ் சொற்கு அந்தக்காண ஆபாசமாகிய விசேஷணமும், கூடஸ்த சேதநமாகிய விசேஷியமும் ஆகிய விசிட்டம்பொருளாம். ஈசுவரனென்னுஞ் சொற்கு, மாயை பிரதிபிம்பங்களாகிய விசேஷணமும், பிரம சேதநமாகிய விசேஷியமும் ஆகிய விசிட்டம் பொருளாம்" என்கின்றனர். இப்பொருள் கூறுதல் இவர் மதத்தினர்க்குப் பழம்பாடமே. ஜீவன் ஈசுவரன் என்னுஞ் சொற்களுக்கு இவர் கூறிய பொருளே பொருளென மாயாவாதச் சார்பில்லாத வடமொழி வல்லார் முன் சாதிப்பாரா?

4. 40-வது பக்கத்தில் இருவர் கூடுங்கலப்பிலே இன்யானுபவம் உண்டென்பதை எளனஞ்செய்து, அதனைச்சாதிப்பதற்கு "பிரமசாரி முதலியோர் ஒருவராய்த் தனித்து சதா பரமேசுவரத்தியானியாயிருத்தலின் ஆனந்தமுடையோரென்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றன" வென்று

கூறுகின்றனர். பரமேசுவரத்தியானத்தில் தியானிப்பவனாகிய ஜீவனும், தியானிக்கப்படுவோனாகிய பரமேசுவரனும் உளரென்றாகி இருபொருள் உண்மை சித்திக்கவும், மேலே இருவர் கூடும் கலப்பில் இன்பானுபவம் உண்டென்றதை எளனஞ் செய்தது எவ்வாறு பொருந்தும்? இது பிரதிஞ்ஞாசந்நியாசம் என்னும் தோல்வித்தானமாகாதா?

5. 22-வது பக்கத்தில் "பாசம் எங்ஙனம் நித்தியமாம்" என்றுவினவி பெரியார் திருவாக்குச் சிலவற்றை எடுத்துக்காட்டி, 24-வது பக்கத்தில் பாசம் அநித்தியம் என்று தெளிவாய் விளங்கிவிட்டதாகக் கூறுகின்றனர்.

இவர் காட்டிய திருவாக்குக்களாவன:—

"இல்லை எனுமாயை" கந்தரனுபூதி.
"எங்குஞ் சிவமொழிய இல்லை.....மற்றனைத்தும் பொய் பொய்" சிவானந்தமாலை.
"பொய்யாயினவெல்லாம் போயகல வந்தருளி" திருவாசகம்.
"பொய்மாயப் பெருங்கடலிற்" திருநாவுக்கரசு சுவாமிகள்.
"ஆயும்பொய் மாயை" திருமந்திரம்.
"பொய்யாய்ப் பழங்கதையாய்" பட்டினத்துப்பிள்ளையார்.
"முத்தியினும் மும்முதலும் உண்டென்றுரைத்தலெவன்,
பித்தமுறும் சைவாநீ பேசு"
"பேசவிரண்டுண்டோ பேய்ச் சைவா" சிவஞான வள்ளலார்
"பொய்யுலகை" திருவிளையாடற் புராணம்.

இத்திருவாக்குக்களிற் பொய்யென்று வருவனவற்றிற்கெல்லாம் 'நிலையாமை' பொருளே அன்றி 'இன்மை' பொருளன்று. 'இல்லை எனுமாயை' என்ற கந்தரனுபூதிச் செய்யுட்கும், சுவானுபவ காலத்தில் தனக்கு இல்லாத அனுபவத்தை ஒட்டி 'நிலையாமை' பொருளேயன்றி வேறன்று. அது "இட்டனை" என்று அடுத்துவரும் வாக்கியத்தால் இனிது விளங்கும். பொய்யென்பதற்கு நிலையாமையே பொருள் என்னும் கருத்துப்பற்றியே திருக்குறள் ஆசிரியர் நான்கதிகாரங்களால் ஞானஇயல் கூறுங்கால் முதற்கண் 'நிலையாமை' கூறி அடுத்துத் 'துறவு' கூறியருளினர். அவர் உலகத்தைப் பொய்மை என்று கூறாது நிலையாமை என்று கூறியதூஉமன்றி. பொய்ம்மையென்று வருமிடங்களுக்கு நிலையாமையே பொருளென்பதை பொய்மை என்னுஞ் சொல்லாலும் சிற்சில இடங்களில் விளக்கிக் காட்டுகின்றார். அவை வருமாறு:—

84-ம்—அதி—பேதைமை.

"பொய்படு மொன்றோ புனைபூணும் கையறியா
பேதை வினைமேற்கொளின்.

92-ம்—அதி—வரைவின் மகளிர்.

"பொருட்பெண்டிர் பொய்மை முயக்கம்" என்பன.

இவ்விரண்டிடத்தும் பொய்மை என்பதற்கு நிலையாமை பொருளென்று இன்மைதான் பொருளென்று சாதிக்க முடியுமா?

அன்றியும் 41-வது பக்கத்தில் "இவர் வாக்கியம் பொய்க்குமன்றே" என்று இவரே கூறியுள்ளார். பொய்க்குமென்றதற்கு இல்லை யாகுமென்ற பொருள் கொண்டு எழுதினரா? நிலையாதாகுமென்ற பொருள்கொண்டு எழுதினரா?

அன்றியும் திருமந்திரத்தில்

பதி பசு பாசமெனப் பகர் மூன்றிற், பதியினைப்போற் பசுபாச மனாதி
பதியினைச் சென்றணுகாப் பசுபாசம், பதியணுகிற் பசுபாச நிலாவே"

அறிவறிவென்ற வறிவுமனாதி
யறிவுக்கறிவாம் பதியுமனாதி
யறிவினைக் கட்டியபாசமனாதி
யறிவுபதியிற் பிறப்பறுந்தானே.

மலக்கலப்பாலே மறைந்தது சத்தி,
மலக்கலப்பாலே மறைந்ததுஞான
மலக்கலப்பாலே மறைந்தனன்றானு,
மலக்கலப்பற்றான் மதியொளியாமே.

அனாதிபசுவியாத்தியாகுமிவனை
யனாதியில்வந்த மலமைந்தாலாட்டி
யனாதியிற்கேவல மச்சகலத்திட்
டனாதிபிறப்பறச் சுத்தத்துளாகுமே.

என்பனவாதியாகக் கூறும் திருவாக்குக்களால் பதி, பசு, பாச மூன்றும் அனாதி நித்தியம் என நன்கு விளங்கவும், அதனை மறந்து 24வது பக்கத்தில் "துவைதமலத்தடிப் பேறி வாய்கூசாது பாசம் நித்தியம் நித்தியமென்று பறையறைகின்றார்." என்றெழுதியது எத்தடிப்புப்பற்றி?

இனி, பொய் யென்பதற்கு இல்லாமை என்ற பொருளையாவது இவர் உண்மையிற் கொண்டிருக்கின்றாரா? கொண்டிருப்பின் செட்டியாரவர்கள் எழுதியதும் பொய்யாதலின் அதற்கு இவ்வளவு சிரமப்பட வேண்டாமே? இதனானே பொய்யை மெய்யென்று வீணாச்சிரமங்கொள்ளும் புண்ணிய முடையார் சுவாமியாரும் இவர்மரபினரும் என்பது விளங்கவில்லையா?

6. 32–வது பக்கத்தில் "அவைதிகசைவசித்தாந்திகள்" எனவும், 18–வது பக்கத்தில் "அவைதிகர்களின் கூட்டுறவால்" எனவும் எழுதியுள்ளார்.

திருமந்திரம், ஆகமச்சிறப்பு "அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்" திருமூலர் வரலாறு "செப்புஞ்சிவாகமமென்னும் அப்பேர்பெற்று"

சன்மார்க்கம்.

சைவப் பெருமைத் தனிநா யகனந்தி
யுய்ய வகுத்த குருநெறி யொன்றுண்டு
தெய்வச் சிவநெறி சன்மார்க்கஞ் சேர்ந்துய்ய
வையத்து ளார்க்கு வகுத்துவை த்தானே.

சைவஞ் சிவனுடன் சம்மந்தமாவது
சைவந் தனையறிந் தேசிவஞ் சாருதற்
சைவஞ்சிவந்தன்னைச் சாராம னீவுதற்
சைவஞ் சிவானந்தஞ் சாயுச் சியமே.

ஆறந்தம்.

சித்தாந்தத் தேசிவன் முத்திசித் தித்தலாற்
சித்தாந்தத் தேநிற்போர் முத்திசித் தித்தவர்
சித்தாந்த வேதாந்தச் செம்பொரு ளாதலாற்
சித்தாந்த வேதாந்தங் காட்டுஞ் சிவனையே.

என்பனவாதியாய் வருந் திருவாக்குக்களால் சிவாகமங்கள் சிவபெருமானால் அருளிச்செய்யப்பட்டனவென்றும், சைவம், வேதாந்தத்தைத் தழுவிய வைதிக சைவமென்றும் பொருள் தோன்றவில்லையா? சித்தாந்த வேதாந்தச் செம்பொருளென்னும் இக்கருத்தினையே, "வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம்," "வேதாந்தத்தீதில் பொருள்கொண்டுரைக்கும் சைவம்" எனச் சைவசித்தாந்த பரமாசாரியர்கள் அருளிச்செய்வாராயினர். இன்னும் "அவமற்ற வேதாந்த சித்தாந்தம்" என்னும் திருமந்திரத் திருவாக்கினாலும்,

வேதமோடாகமம் மெய்யாமிறைவனூ
லோதுஞ் சிறப்பும் பொதுவு மென்றுள்ளன
நாதனுரையவை நாடி லிரண்டந்தம்
பேதமதென்பர் பெரியோர்க்க பேதமே.

என்ற திருவாக்கினாலும், வேதாந்தம் சித்தாந்தமிரண்டும் அபேதமான கருத்துடையன என்பது விளங்கவில்லையா?

இனி, வேதாந்தமென்பது நூற்பெயரா? சமயப்பெயரா; சமயப் பெயராயின், சைவம் சிவசம்பந்தம், வைணவம் விஷ்ணு சம்பந்தம் என்பன போல, வேதாந்தம் இன்ன தெய்வத்தின் சம்பந்தமென அச்சொல்லில் வைத்துக்காட்டக்கூடுமா? நூற்பெயராயின் அந்நூலுக்குரிய சமயம் யாது?

7. 19-வது பக்கத்தில் "வேதாந்திகள் தம்மை வேதாந்திகளென்று கூறுவது, அவர்கட்குரியதேயாகும். அவர்களை மாயாவாதிகளென்று சொல்லுமிவர்தாம், உரித்தல்லாத பெயரால் வழங்குகின்றனர். மாயையை ஜகத்திற்கு முதற்காரணமாகக்கூறும் சாங்கியமதத்தரும், இவரினத்தவரும் மாயாவாதிகளாவார்களேயன்றி, உலகமெலாம் பிரசித்தமாய் யாவரும் ஒப்புக்கொண்ட வேதத்தின் முடிவாய உபநிஷத்துக்களிற் பிரதிபாதிக்கப்படும், நிர்க்குணப்பிரமப் பொருளினையே, தமது சொரூபமாகக்கொள்ளும் வேதாந்திகள் ஓர் காலத்தும் மாயாவாதியராகா ராகார்" என்கின்றனர்.

திருமந்திரம்.

ஆகின்ற தொண்ணூற்றோ டாறும் பொதுவென்ப
ராகின்ற வாறாறருஞ் சைவர் தத்துவ
மாகின்ற நாலேழ் வேதாந்திவயிணவர்க்
காகின்றநாலா றையைந்து மாயாவாதிக்கே.

என்னுந் திருவாக்கால் சைவத்தினும் வேதாந்தத்தினும் வேறாக மாயாவாதம் ஒன்றுண்டென்பது பெறப்படுகின்றதன்றோ! அன்றியும், திருவாசகத்தை அருளிச்செய்த ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளுக்கு உபதேசிக்கப் பெற்றது சிவஞானபோதம் என்பதூஉம், அந்நூல் இரௌரவ ஆகமத்திலுள்ள ஓர்பகுதி என்பதூஉம், அது சிவாகமத்தைப் பரமப் பிரமாணமாகக் கொண்டொழுகும் சைவபரம்பரையிலேயே உபதேசிக்கப்பெற்று வருகின்றதென்பதூஉம், யாவரும் அறிந்தனவாகும். ஆகவே ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகள் சைவசித்தாந்தி யென்பது வெளிப்படை. அவர்களருளிய போற்றித்திருவகவலில் "மிண்டிய மாயாவாதமென்னும் சண்டமாருதம் சுழித்தடித்தார்த்து" என்று கூறப்பட்டிருத்தலால், மாயாவாத மென்பது சைவத்தினும் வேறென்பது இனிது விளங்கும். அங்ஙனமாகவும், சைவர்களை மாயாவாதிகளென்று வாளா கூறியதற்குப் பிரமாணம் யாது? தங்களை மாயாவாதிகள் என்றதனால் கூறினேம் என்பாராயின், அது எத்துணைப் பொருத்தமுடைத்தென்பதை அறிஞர் அறிவர். மாயாவாதம் ஒன்றுண்டென்று கூறும் சைவர்கள் வேதாந்தம் இல்லையென்று கூறுவதில்லை. திருமந்திரக்கருத்தின்படி வேதாந்திகளும் உண்டு, மாயாவாதிகளும் உண்டென்றேசைவர்கள் சொள்ளுகின்றனர். ஆதலால் சுவாமியாரையும்இவர் மாபிறரையும் மாயாவாதிகளென்று எந்தச் சைவர்கள் கூறினும், நாங்

கள் மாயாவாதிகளல்லர். வேதாந்திகள் என்றுமட்டும் சொல்லிக்கொள்ளக் கடமைப்படுகிறார்களே யன்றி, சைவர்களாகிய நீங்கள்தான் மாயாவாதிகள் என்று கூறுதல் பொருந்துமா? இனி இவரும் இவர் சார்பினரும், வேதாந்திகளாயின் இருபத்தெட்டுத் தத்துவங்கொள்கின்றனரா? கொள்கின்றேமென்பரேல், அத்தத்துவங்கள் இவையென்றும், அவற்றைப்பற்றிக் கூறும் நூல் இதுவென்றும் காட்டக்கூடுமோ?

8. 13-வது பக்கத்தில் "இவர் மதத்தினர்க்குச் சகசமலம்போன்று சகசமாய்விட்டது" எனவும், 39-வது பக்கத்தில் "நண்பருக்கும் நண்பர் மதத்தினருக்கும் சகசமலம் அனாதியாயிருப்பதுபோன்று வேதாந்த சாஸ்திரத்தை அறியாமையாயமயலும் அனாதியாகவே யிருக்கின்றது" எனவுங் கூறுகின்றார்.

ஞானவாசிட்டம்.

தாசூரன் கதையில் அத்துவிதானுபவம் கூறுமிடத்து
தண்டுலத்தோலுஞ் செம்பினிற்களிம்புஞ் சகசமாய்த் தொழில்விசேடத்தால்
விண்டு போமதுபோற் புருடனுமலத்தை மேவியே போக்குதலியல்பாம்.

என்றருளிச் செய்யப்பட்டிருக்கின்றதே. இதனால் ஞானவாசிட்ட ஆசிரியரும் சைவர்களோடு சேர்ந்தவரொன்றாகி, இவரும் இவரினத்தவரும் ஞானவாசிட்டக் கருத்துக்கு மாறுபட்டவரொன்பதை மறுக்க முடியுமா? இதனானும் வேதாந்த மென்பது ஏகான்மவாதமாகிய மாயாவாதத்தின் வேறென்பது விளங்கவில்லையா? ஞானவாசிட்டத்தில் ஏகான்மவாதம் சாதிக்கும் செய்யுட்கள் பலஉளவென்று காட்டுவாராயின். மேலேகாட்டிய செய்யுளோடு முரணுதவண்ணம் அச்செய்யுள்களுக்குப் பொருள் கொள்ளுதலே முறைமையாகுமன்றி மாறுபடக்கொள்ளுதல் முறைமையாகுமா?

9. சிவஞானவள்ளலார் சாத்திரத்தில் "முத்தியிலு மும்முதலும் உண்டென்றுரைத்தலெவன், பித்தமுறும் சைவா நீபேசு" "பேச விரண்டுண்டோ பேய்ச்சைவா" எனக் கூறியிருத்தலால் சைவசித்தாந்திகள் முத்தியிலும் பாசம் உண்டென்று கொள்ளுகிறார்களென இவர் கருதுகின்றார். அம்மட்டோ! சிவஞானவள்ளலார் தமதுமதத்தினர் என்றும் கருதுகின்றார். அவர் அருளிச்செய்த நூல்களுள் சித்தாந்த தரிசனம் என்பது ஒன்று. அதனுள் பதி, பசு, பாசஉண்மைகளும், இலக்கணங்களும், சாதனங்களும், பயன்களும் சிவஞானபோத முதலிய சித்தாந்த சாத்திரங்களின் முறைப்படி அருளிச்செய்யப்பட்டுள்ளன. அம்மட்டோ;

பதிநூல் பயிலாத பாசண்டர் மார்க்கங்
கதியல்ல வென்றுரைத்தகர்ஞ—பதிநூலே
துள்ளபடி சொல்லா யுயர்ஞானக்கண் ணுடைய
வள்ளலே யெற்கருளை வைத்து.

சிவஞானபோதத்தாற் சென்மவிடாய் தீர்ந்து
சிவஞான சித்தியாற்றேறிச்—சிவஞான
போதத்தை மெய்கண்டான் போதித்தான் சித்தியினைச்
சாதித்தான் ருனருணந்தி.

மற்றிரண்டு மாய்ந்து மறுவிலுமாபதியார்
சொற்றசிவப்பிரகாசத் தொன்னூ—லற்ற நிலே
யாங்கதுவே சீவன்முத்தனுக்குவிக்குமந்நூலே
யோங்குக நீடுழியும் பின்னும்.

அம்மை திருவந்தாதி நற்கீரரந்தாதி
பொய்மையிலாப் பொன்வண்ணத்தந்தாதி—செம்மைத்
திருமூலர் மாலேயிவை சித்தாந்தமாகும்
வருமூவர் வாக்கியமுமாம்.

சித்தாந்தமென்னும் திருவிளக்கைக் கொண்டறிந்தேன்
முத்தாந்தவாவி முதற்பொருளைச்—சித்தாந்தத்
தேனைப்பருகிச் செநநமரணமெனுங்
கானைக்கடந் தொழிந்தேன்காண்.

என்பன வாதியதிருவாக்குக்களால் சிவஞான போதமுதலிய சைவசித்தாந்த சாத்திரங்களை சிவஞானவள்ளலார் பயின்றநூல்களெனவும், சைவசித்தாந்தமே அவர்கொள்கையெனவும் விளங்குகின்றனவே? அம்மட்டோ அத்துவிதமென்பதும் சைவத்துக்கே உரித்தென்பதை!

அத்துவித முத்தி யளித்தகுரு நாதாவென்
பொய்த்துவிதம் போமாறு போதித்த—கத்தனே
முத்தியிலு மும்முதலு முண்டென்றுரைப்பதுவுஞ்
சத்தியமோ மித்தையோசாற்று.

கையிலுறு புண்ணுக்குக் கண்ணுடிவேண்டுவமோ?
மெய்யுணர்விலுண்டோ விபரீத—மையறிவு
மோரறிவாய்ப் போனவிடத் தோகோகோமும்முதலுஞ்
சோராமனிற்குமோசொல்.

சைவஞ்சிவத்தோடு சம்பந்தமானமையாற்
சைவமே யத்துவிதஞ் சாதிக்குஞ்—சைவத்தை
வேறென்று கொள்ளற்க வேறற்ற வேதாந்தக்
கூறென்றுகொள்ளுதலே கோள்.

என்பனவாதிய செய்யுட்களால் இனிது விளக்கியருளினர். அவ்வாறாகவும் 67-வது பக்கத்தில் "அத்வைதத்தினை அவைதிக சைவசித்தாந்திகள் கண்டஞ்சுமாறு" என்றெழுதியது எத்துணைப் பொருத்தமுடைத்து? வள்ளலார் சாத்திரத்தில் "பித்தமுறுஞ் சைவா பேய்ச்சைவா" என்றதுபேதவாத சைவாயேயாம். எனவே, பேதவாதசைவம் முதலாகச்சைவம் பலதிறப்படும். எனவும், அவற்றுள், மேலானதாய் விளங்குவது சித்தாந்த சைவமெனவும், இச்சித்தாந்த சைவத்தின்படி முத்தியில் உயிருண்டு மலமில்லை யெனவும், முத்தியில் மலமில்லா தொழியினும் ஏனைப்பெத்தரிடத்திருத்தலால் மலம் அநாதி நித்தியம் என்றற்கிழுக்கில்லையெனவும், பதி, பசுவுடன்என்றும் பிரிப்பின்றி நிற்குமாறுபோல, பாசம் நில்லாமைபற்றியே, பாசம் அநித்தியம் எனப்படுமெனவும், இவ்வாறே சிவஞானபோத முதலிய சித்தாந்த சாத்திரங்கள் போதிக்கின்றன எனவும் அச்சாத்திரங்களைக் கேட்குமுறையில் தக்கோரிடம் கேட்டு உண்மை உணராது அவைதிக சைவசித்தாந்திகள் எனவும், துவைத சைவர்கள் எனவும், மனம் போனவாறு சொல்லுதலும் எழுதலும் முறையாகுமா? இன்னும் சிவஞானவள்ளலார் சாத்திரத்தில்

சைவசித்தாந்த மெல்லாந் தானவனாகிநிற்றல்
மையறுவேதசித்த மற்றதுநானேயென்ன
லுய்வகைக்கிரண்டு மொன்றென்றோதியென் னுயிர்க்கிலாபஞ்
செய்தசற்குரவனீயே திருப்புலி வனத்துளானே.

என்று கூறியிருப்பதால், வேதாந்தத்தைத் தழுவியது சைவசித்தாந்த மென்றாகி வைதீக சைவமென்பது பெறப்படவும், அவைதிக சைவம்என்று இவர் எந்தத்துணிபு கொண்டெழுதினார்!

10. 51-வது பக்கத்தில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கும் "இறப்பிலா இந்தமோகம்" என்றஞானவாசிட்டச் செய்யுளுக்கு, இவரும் இவர்சார்பினரும் என்னபொருள் கொள்ளுகின்றனர்?

11. 38-வது பக்கத்தில் "நான் கருடனென்னும் பொய்யாகிய பாவனையினால் பிறர்பாலுள்ளவிட நீக்குதல் எவ்வாறேலும்? ஏலாதாகவே, கருடபாவனை பொய்யென்றங்கீகரிக்க நேரும். அங்ஙனம் பொய்யென்று நம் நண்பர் அங்கீகரிப்பரா" என்றெழுதுகின்றார். பொய்யாகிய பாவனையினால் விடநீக்குதல் எவ்வாறேலும்? ஏலாதாகவே என்றபின்னர், பொய்யே

என்றங்கீகரிக்க நேருமென்றது எத்துணைப் பொருத்தமுடைத்து. சுவாமியார் தர்க்க சாத்திரத்தில் வல்லவர்போன்று நம்மைப் பலஇடங்களிலும் வியந்துகொள்ளுகின்றனரே! இவ்விடத்தில் ஏலாதாகவே என்றபின்னர் எதிர்மறைப்பொருளாக மெய்யே என்றங்கீகரிக்கநேரும் என்று முடித்தல்முறையாகுமன்றி, பொய்யே என்றங்கீகரிக்க நேரும், என்று முடித்தல் முறையாகுமா? இனியேனுங் கவனித்து அங்கீகரிப்பாரா?

12. 36-வது பக்கத்தில் "நம்நண்பர் சிவஞானிகளென்று சொல்லித் தம்பட்டமடிக்கும் தாயுமான சுவாமிகள்" என்கின்றார். இவருக்குத் தாயுமானசுவாமிகள்மீது இத்துணைக்கோபம் வந்தமைக்குக்காரணம் என்னையோ? தாயுமானசுவாமிகள், திருமூலநாயனார் மரபில்வந்த பெரியாரால் உபதேசிக்கப்பெற்றவரென்பதூஉம், அவருக்கு உபதேசிக்கப்பெற்ற சாத்திரம் சிவஞானசித்தியாரென்பதூஉம், அவர் அருளிச்செய்த திருப்பாடல்களுள், "மௌனகுரு" என்னும் தலைப்பின்கீழ் "ஐந்து வகையாகின்ற" என்றதொடக்கத்துச் செய்யுளால் இனிது விளங்கும். இவர் திருமூலநாயனார் போலவே வேதாந்தம் சித்தாந்தம் இரண்டனையும் சமரசமாகக்கொண்டு சித்தாந்தநெறியே சென்றவர்.

போதாந்தப் புண்ணியர்கள் போற்றிசய போற்றியெனும்
　　வேதாந்த வீட்டின்விளக்கே பராபரமே.
முத்தாந்தவீதிமுளரிதொழுமன்பருக்கே
　　சித்தாந்த வீதிவருந் தேவேபராபரமே.
வேதாந்த சித்தாந்த சமரசநன்னிலை.

சந்ததமு மெனதுசெய னினதுசெயலியானெனுந்
　　தன்மைநினையன்றி யில்லாத்
தன்மையால் வேறலேன் வேதாந்த சித்தாந்த
　　சமரசசுபாவமிதுவே.

என்பனவாதிய திருவாக்குக்களால் வேதாந்த சித்தாந்த மிரண்டினையும் சமரசமாகக்கொண்டுள்ளாரென்பது இனிது விளங்கும். குருமரபின் வணக்கம் என்னுந் தலைப்பின்கீழ், மெய்கண்டதேவர் முதலாகிய சைவசித்தாந்த பரமாசிரியர்களைத் துதித்தலால் சித்தாந்தநெறியே சென்றவரென்பது இனிது புலனும். இவ்வாறு வேதாந்தத்தையுந் தழுவிச்சென்ற தாயுமானசுவாமிகளை, சிவஞானிகளென்று சொல்லித்தம்பட்டமடிக்கும் என்றுஎளனஞ்செய்தது, "யாங்களே கடவுளென்றிடும் பாதகத்தவரும்" என சிற்சுகோதய விலாசமென்னும் தலைப்பின்கீழ் பத்தாவது செய்யுளில் இவர் மதத்தைக் கண்டித்திருத்தல்கொண்டுபோலும். தாயுமானசுவாமிகளைச் சிவஞானிகளென்று கொள்ளமனமில்லாத இவர், திருமூலநாயனாரைப் பெரியார் என்று

கொண்டது, ஜமீந்தாராகிய ஸ்ரீமாந். அள. அரு. அருணாசலச்செட்டியா ரவர்கள் திருமந்திரத்தைப் பரமப்பிரமாணமாகக் கொண்டொழுகுவது பற்றியா? அல்லது உண்மையா?

13. 32-வது பக்கத்தில் "தமது குலசருவென்று சொன்மாத்திரை யானே கொண்டாடும் திருமூலநாயனர்" என்கின்ருர். பெரிய புராணத்தி லும் திருமுறைவகுப்பிலும் எழுத்து மூலமாகவும், சிவாலயங்களில் வழிபாடு மூலமாகவும், திருமூலநாயனுரைச் சைவசித்தாந்திகள் கொண்டாடுகிருர் களென்பது சுவாமியாருக்குத் தெரியுமா? தெரியாதா? தெரியுமாயின் சொன்மாத்திரையானே கொண்டாடும் என்றது பொருந்துமா? தெரியாதா யின் வாதத்திற்குவரும்பொழுதாவது தெரிந்துகொள்ளவேண்டாமா?

14. 26-வது பக்கத்தில் "பற்றென்பதின்னதென் றுணரு மறிவிலி யாய இவரும் இவர்மதத்தினரும்" என்று அறிவிலிப்பட்டத்தைச் சைவமத த்தினர் எவர்க்கும் அஞ்சாது சூட்டுகின்றனர். 25-வது பக்கத்தில் "இவரும் இவர் மதத்தினரும் தொன்றுதொட்டு ஊழையிட்டுவருகின்றனர்" என்கின் ருர். 35-வது பக்கத்தில் "யாகாவாராயினும் நாகாக்க காவாக்காற், சோகாப் பர் சொல்லிழுக்குப்பட்டு" என்னும் திருக்குறளை எடுத்துக்காட்டிய இவர் தன் நாவைக்காத்துக்கொள்ள முடியாமல் "சொல்லுதல் யார்க்குமெளிய வரியவாஞ், சொல்லியவண்ணஞ்செயல்" என்னுந் திருக்குறளுக்கு இலக்கா யினமை, படிப்பின் கெர்வம்பற்றியா? அல்லது,

கற்பன கற்றுக்கலைமன்னு மெய்யோக
முற்பதஞான முறைமுறை நண்ணியே
தொற்பதமேவித்துரிசற்று மேலான
தற்பரங்கண்டுளோர் சைவசித்தாந்தரே

என்னும் திருமந்திரத்தின்படி சித்தாந்தநூல்களைச் செவ்வனே தெரிந்து கொள்ளாக்குறைபற்றியா?

15. 18-வது பக்கத்தில் "உமாபதி சிவாசாரியார் சமஸ்கிருதஞானம் உடையவராயிருக்க, சர்வஞ்ஞயபரமேசுவரன் சமஸ்கிருதபாஷையில்சுலோ கரூபமாய் எழுதியனுப்பலாமே. அவ்வாறின்மையின் அக்கூற்று இவர்இன த்தாருள் தொன்றுதொட்டுவரும் வழக்கேயன்றி வேறுவிஷேடமின்றெ ன்க" என்கின்ருர்.

ஆட்பாலவர்க்கருளும் வண்ணமு மாதிமாண்பும்
கேட்பான் புகிலளவில்லை கிளக்கவேண்டா
கோட்பாலனவும் வினையுங் குறுகாமை யெந்தை
தாட்பால் வணங்கித் தலைநின்றிவை கேட்கதக்கார்.

ஏதுக்களாலு மெடுத்த மொழியாலுமிக்குச்
சோதிக்கவேண்டா சுடர்விட்டுள னெங்கள் சோதி
மாதுக்க நீங்கலுறுவீர் மனம்பற்றிவாழ்மின்
சாதுக்கண் மிக்கீ ரிறையேவந்து சார்மின்களே.

என்னுந் தேவாரத் திருப்பாசுரங்களை உணர்ந்திருப்பின், இவ்வாறு கூறுவாரா? அன்றியும் சமஸ்கிருத ஞானமுடைய உமாபதி சிவாசாரிய சுவாமிகள், சமஸ்கிருதத்தில் ஒரு நூலேனுஞ் செய்யாது தமிழில் பல நூல்கள் செய்துவைத்தமைக்குக் காரணம் என்னை?

இன்னும் அவர், நாம் பிரமம் என்னும் மாயாவாதிகளைக் கண்டித் தொதுக்கிய காரணத்தால், அவரை ஒதுக்கிவிட மனமின்றி "ஜகத்குரு சங்ராசாரிய சுவாமிகளின் பிரபாவம் உணர்தற்கு முன் அவைதிகர்களின் கூட்டுறவால் மருண்டு முற்கூறிய செய்யுட் கூறியிருக்கலாம். அவ்வாறு கொள்ளாதொழியில் பௌஷ்கராகமத்தில் பதிபடலத்தில் பதினைந்தாவது சுலோக வியாக்யான அவசரத்தில்..........பிரமாணங்காட்டிய சர்வோத் கிருஷ்ட சமஸ்கிருத பாஷையிலுள்ள கெம்பீர வாக்கியங்களுக்கு இத் தமிழ் வாக்கியம் முரண்படுமாதலின் முரண்படாவாறு யாம் கூறிய நெறியினையே கடைப்பிடித் தொழுகுக" என்கின்றார். ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் முன்னர்ப் பௌத்த மதத்தினை வெல்லுதற்பொருட்டு ஏகாத்மவாதம் சாதித்து, பின்னர் தாம் உய்யவேண்டிச் சைவசித்தாந்த நெறியைத் தலைக்கூடி நின்று சைவசித்தாந்த சம்பந்தமாகச் சில வியாக்யானங்களும், சிவ வழிபாடுகளும் செய்துவந்தமையால், ஸ்ரீ உமாபதிசிவாசாரிய சுவாமிகள், பின் செய்த வியாக்யானத்தை எடுத்தாண்டனரென்று ஏன் கொள்ளக் கூடாது?

16. 14-வது பக்கத்தில் "ரௌரவாகமத்திலுள்ள பாசவிமோசனப் படலத்தின், பன்னிரண்டு சுலோகங்களுக்குத் தமிழிற் பேருரை எழுதிய சிவஞானசுவாமி யென்பரேல், அவரும் இவர்போன்றே. திருவாசகத்திற் கூறிய எண்குணங்களும், அப்பைய தீக்ஷிதயோகீந்திரரவர்களால், சீவனுக்கு வந்து பொருந்துகின்றதென்று நாட்டியிருப்பதனைக் கற்றறியுந் திறனின்றித் தமது பேருரையின்கண் மாறாய் மனம்போனவாறு, விரிவாகப் பொறித்து, உண்மைப்பொருள் விளங்கா திடர்ப்பட்டவராகலின், அவரைப் பெரியாரோ டொருங்குவைத்தெண்ணாது வேறாயொதுக்குக" என்கின்றார். சிவஞான சுவாமிகள் சிவனுக்குரிய எண்குணங்களும் மோக்ஷகாலத்தில் சீவனுக்கு வந்து பொருந்தாவென்று எவ்விடத்து எழுதியுள்ளார்கள்? இவரும், இவர் சார்பினரும் பொய் பொய்யென்று பொய்யினையே சிந்தனை செய்பவராதலின், இப்பொய்க்கதை கூறினரா? அல்லது, "பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற சிலசொல்லல் தேற்றாதவர்" என்னும் பொய்யா

மொழிக்கிலக்கியமாய், இவரும் இவர் சார்பினரும் ஒரு வார்த்தையாவது குற்றமறச் சொல்ல விரும்பாது, வெற்றுரையாகப் பலவார் வார்த்தைகளைச் சொல்ல விரும்பி, ஒரு நூலையாவது கசடறக் கல்லாது, பலநூல் வல்லாரென்று அறியாதார் புகழ மேலெழுந்த வாரியாய்ப் பல நூல் படிப்பவராதலின் அதுபற்றி இப்புரட்டுக்கதை கூறினரா? ஒரு நூலைப்பற்றியாவது. ஒருவர் உரையைப்பற்றியாவது எழுதுவதாயின், அந்நூலையும், அவ்வுரையினையும் முறையாய்ப் பாடங்கேட்டுப் பொருளை நன்குணர்ந்து எழுதவேண்டும். அவ்வாறின்றித் தன்மனம்போனவாறு எழுதுதல் முறையாகுமா? சிவஞான பாஷியத்தில் சித்தாந்தப் பொருள்களைத் தெளிவாயுணர்ந்துகொள்ளும்வண்ணம் அமுதமாரிபோல் பொழிந்துவருமிடத்தில் "இங்கேசீவன்முத்தனாய் அகம் புறம் எங்கும்வியாபித்து தற்றருமதருமியாய் தற்றருமமெனப்பட்ட முற்றும் உணர்தல் முதலிய எண்குணங்களும் உடையனாய் இங்ஙனம் சிவத்துவத்தைப் பெற்று" எனவும், "சிவனோடொற்றுமைப்பட்டு நிற்புழி சிவன் குணங்களாகிய எண்குணங்களும் தன்றன்மையாகக்கொண்டு சிவனேயாய் நிற்பன்" எனவும், "படிகம் மாணிக்கத்தைச் சார்ந்த வழி மாணிக்க வண்ண முழுதும் தன்வண்ணமாகக்கொண்டு நிற்றல்பற்றி, படிகத்தை மாணிக்கமேயென அதனோடொப்புமை கூறுதலமையும். அதுபற்றி மாணிக்கத்தைப் படிகத்தோடொப்புமை கூறுதலமையாதவாறுபோல, ஆன்மா சிவத்தைச்சார்ந்தவழி, சிவத்தின்குணம் முழுவதும் தன்குணமாகக் கொண்டு நிற்றல்பற்றி ஆன்மா சிவமேயெனச் சிவத்தோடொப்புமை கூறுதலமையும்: அதுபற்றிச்சிவத்தை ஆன்மாவோடொப்புமை கூறுதல் சாலாது" எனவும் "மாணிக்கத்தின் ஒளி படிகத்தின் முழுவதும் விளங்காதவழி, விளங்காதபாகத்தால் மற்றொன்றனைப்பற்றுமாறுபோலச், சிவத்துவமாகிய எண்குணங்களும் தன்பால் முழுவதும் விளங்காதவழி மற்றொன்றனையுமறியும்: அறியவே அதுவதுவாய் அழுந்தும் தன்மையானது பந்தத்துக்கேதுவாம்" எனவும், இவ்வாறே வேறுபல இடங்களினும் அருளிச்செய்திருக்கின்றமையை இனியேனும்படித்து சிவஞானசுவாமிகளைப்பற்றிக் கூறிய குறைக்கு மன்னிப்புக்கேட்டுய்வரா? பெரியார் நிந்தனை கூடாது என்று போதிக்கும் இவர் தாமட்டும் பெரியார் நிந்தனைசெய்துவருதல் மேலேகூறியவாறு சைவசித்தாந்த சாஸ்திரங்களைக் கற்றறிந்தடங்காக்குறையினாலே என்பதை மறுக்கமுடியுமா? ஸ்ரீ சிவஞானசுவாமிகள் உரையைப் பற்றிய இந்த ஒரு விஷயத்தையாவது வாதசபையில் சாதிக்கச்சித்தமாயிருக்கின்றனரா? இருப்பின் சபைத்தலைமை வகிப்பதற்கு ஸ்ரீமாந். ஜமீந்தார் அருணசலச்செட்டியாரவர்களையே நான் சம்மதிக்கின்றேன்.

17. 69-வது பக்கத்தில் மூக்கனாயன் கதையொன்றை மிகவிரிவாக சுவாமியார் வீணாச்சிரமங்கொண்டெழுதியுள்ளார், அக்கதையில் திருட்டாந்

த்தில் "உடன்பாடல்லாததனை" என்ற ஒருவாக்கியத்தைப் பலஇடங்களில் உபயோகித்து, அவ்வாக்கியத்தைத் தாட்டாந்தத்திலும் மறந்துவிடாமல் வேண்டுமிடங்களில் புகுத்தியுள்ளார். திருட்டாந்தத்தில் அவ்வாக்கியத்தை, உபயோகித்தமைக்குக் காரணங்காட்டவேண்டி "ஏளனத்தை நிவர்த்திப்பான், பிறர்பழிப்பை நிவர்த்திப்பான்" என்ற வாக்கியங்களையும் புகுத்தியுள்ளார். அவ்வாறே தாட்டாந்தத்தில் புகுத்தினால், நான் பிரமமென்னும் ஞானம் ஏளனத்துக்கிடமாகுமென்றஞ்சி மறைத்துக்கொண்டது முறையாகுமா? அன்றியும் அக்கதையின்படி மூக்கரையன் தானத்தில் நான் பிரமமென்னும் ஞானமும், கைலாயம்சோற்றும் தானத்தில் ஆண்டானடிமை ஞானமும் சுவாமியார் கருதாமலே அமைந்தன என்பதை அறிந்தாவது திருவருட்சம்மதம் எது என்பதை உணர்வாரா? அன்றியும் இவர்மதத்திற்கு முதலாய ஆசிரியராய் விளங்கிய ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள், தாம் உய்தற்பொருட்டுஆண்டானடிமைத்திறம்பேணி,பௌத்தமதத்தை வெல்லுதற்பொருட்டு ஏகாத்மவாதம் சாதித்திருக்கவும், அவ்வுண்மை அறியாது அவர்க்குப் பின்வந்த இடையாய ஆசிரியரும், கடையாய ஆசிரியரும் ஏகாத்மவாதமே ஆதிசங்கராசாரியசுவாமிகள் கொள்கையென்று தம்பட்டமடித்துத்திரிவது நுணுகி ஆராயும் அறிவின்மையென்பதை மறுக்கமுடியுமா? ஆண்டானடிமைத்திறத்தின் உண்மைப்பொருள் இவருக்காவது இவர் மரபினருக்காவது தெரியுமாயின் அதனை ஏளனஞ்செய்யமாட்டார். இருபொருள்களும் உருவுடைப்பொருள்களாய் ஓரிடத்தில் குந்திக்கொண்டிருப்பதே ஆண்டானடிமைத்திறமென்று இவரும் இவர் சார்பினரும் வீணுச்சிரமங்கொள்ளுகின்றனர். பெத்தமுத்தி இரண்டிடத்தும், இறைவனையின்றி உயிர்தனித்து நில்லாமையானும், தனித்து ஒன்றை அறியாமையானும், தனித்து ஒன்றைச் செய்யாமையானும், தனித்து ஒன்றை இச்சிக்காமையானும், எவ்விடத்தும் இறைவன் ஆண்டானும் உயிர்அடிமையுமென்று சைவசித்தாந்திகள் கூறுகின்றார்களென்பதை இனியேனும் அறிந்துகொள்ளுவாரா?

18. 2-வது பக்கத்தில் "கல்வியில்லாது நாமாபிமானமாத்திரமாயுள்ள சைவசித்தாந்திகள்" என்கின்றார்.

வேதாந்திகளென்று சொல்லித்திரிகின்ற அனைவரும் வேதாந்த சாஸ்திரம் படித்திருக்கின்றார்களா?

19. 67-வது பக்கத்தில் சிதம்பரசுவாமிகளருளிச்செய்த பலசெய்யுட்களை யெடுத்துக்காட்டி "துவைதிகளது பதிபசு பாச நித்தியத்தன்மையினையும் ஆண்டானடிமைத் திறத்தினையும் அறவேயழித்தொழித்திருப்பவும்'' என்றும், 77-வது பக்கத்தில் துறவுசுவாமிகளருளிச்செய்த சிலசெய்யுட்களை யெடுத்துக்காட்டி "பதி பசு பாசங்கள் அநித்தியங்களென்னும்

கொள்கையுடையோர்களென்பதை யினியேனுமுணர்வாராக" என்றுங் கூறுகின்றார். பதி பசு பாச மூன்றும் அநித்தியமாயின், இம்மூன்றின் வேறான நித்தப்பொருள் எது? இதனானே சுவாமியார் சூனியவாதியாகிய நிரீச்சுரவாதியாரென்பது விளங்கவில்லையா? இவர் தம்மதத்தைத் தம்மட்டில் வைத்துக்கொள்ளாது, பெரியார் கருத்து இதுவேயென்று அவர்கள் மீதும்தமது மதத்தை ஏற்றுகின்றார். அந்தோ! இத்தீச்செயலுக்கு என்ன பயனடைவரோ? இவரால் எடுத்துக்காட்டப்பட்டிருக்குஞ் செய்யுட்களில் பதி பசு பாச மூன்றும் அநித்தியமென்று கூறியிருப்பதாகக் காட்டக் கூடுமா?

20 முகவுரை யெழுதியயாரோ ஒருவர் தம்முடைய படிப்பின்றிறத்தைப் பிறர்அளந்துகொள்ளுமாறு ஏதேதோ கூறுகின்றார். அவர் தங்கூற்றேடமையாது தொல்லாசிரியர் திருவாக்குக்களையும் தன்மனம்போனவாறு திரித்து அவ்வாசிரியர் கூற்றாகக் கூறுகின்றார். அதுவருமாறு:—

காலத்தினாற் செய்தநன்றி சிறிதெனினு
ஞாலத்தின்மாணப்பெரிது. என்பது தேவர் திருவாக்கு.
'காலத்தினாற் செய்தநன்றி யொருவர்க்கீது
ஞாலத்தின் மாணப்பெரிது. என்பது இவர் திரிபுக்கூற்று.

இப்புரட்டு முகவுரையை வாங்கிச்சேர்த்து வெளியிட்ட சுவாமியாருக்கும் திருக்குறளாராய்ச்சி உண்டென்று ஒப்புதல் கூடுமா?

கல்லாத மேற்கொண்டொழுகல் கசடற, வல்லதூஉ மையந் தரும்.

என்ற தேவர்திருவாக்குக்கிலக்கியமாய், தாம்பயின்றறியாத திருக்குறள், திருமந்திரம், தேவாரம், திருவாசகமுதலிய நூல்களிற்றலையிட்டு, தாம்கற்றநூல்களிலும் தமக்குநுணுகிய ஆராய்ச்சி உண்டோ இல்லையோ வென்றையுறச் செய்வதைவிடத் தம்மளவில் தாமடங்குதல் முறைமை யென்பதை இனியேனும் அறிந்தடங்குவாரா?

நிந்தனைபுரிதலும், முன்னொடுபின்முரண்படக் கூறுதலுங் கூடாவென்றுபதேசிக்கவந்த சுவாமியார், தமது உபதேசத்தால் அவ்விரண்டினிடத்தும் 'ஷணப்பன்வீட்டுக்கோழி தானே விலங்கின்மாட்டிக்கொள்வது போன்று' யோசனையின்றித் தாமே மாட்டிக்கொண்டார். அவற்றுட் சிலவற்றையே ஈண்டெடுத்துக் காட்டினும். இனியேனும் இத்தகைய குற்றங்களில்மாட்டிக்கொள்ளாது, எமது கேள்விகளுக்கு எழுத்துமூலமாய்விடைதரினும் தருக. வாதசபைகூட்டி விடைதர எண்ணினும் நாம் சித்தமாயிருக்கின்றேம்.

சூட்டுக்கோலால் மாட்டிக்கொண்ட
காசிகானந்த சுவாமியார் கட்டுரையின்மேல் கடா
முற்றுப்பெற்றது.

௨

சிவஞானபோதச் சிற்றுரை விளக்கம்.

இதனுள் ஸ்ரீமெய்கண்டதேவர் அருளியசிவஞானபோத மூலமும், வார்த்திகப் பொழிப்புரையும், மாதவச் சிவஞான சுவாமிகளருளிய சிற்றுரையும், அவ்வுரையில் சுருக்கிக்காட்டப்பட்டிருந்த பல விஷயங்களையும் விரித்தெழுதிய விளக்கமும், பல அட்டவணைகளும் உள்ளன. இதுஉயர்ந்த காகிதத்தில் 748 பக்கத்தில் அச்சிட்டுநயம் கலிக்கோபயிண்டு செய்திருக்கிறது. விலை ரூ 3—8—0

சிவஞானசித்தியார் சுபக்கம்

மூலமும் பொழிப்புரையும்.

இவ்வுரை மாதவச் சிவஞானசுவாமிகள் அருளிய பொழிப்புரையைத்தழுவி மிகவிரிவாய்ப் பல அரும் பெரும்விஷயங்கள் எளிதில்அறிந்துகொள்ளும் வண்ணம் எளியநடையில் எழுதப்பெற்றிருக்கின்றது.

விலை ரூ 1—8—0

தசகாரிய விளக்கம்.

இது தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் என்னும் பத்துக்காரியங்களையும், அவை அனுபவத்திற்குவரும் முறைமையினையும் இனிது விளக்குவது. விலை அணா 6.

ஆன்மபோதம் அணா 1.

இவற்றின் தபாற்கூலிவேறு. வேண்டுவோர் நம்மிடம் பெறலாம்.

இங்ஙனம்,
பொ. முத்தையபிள்ளை,
பங்களாத்தெரு,
தூத்துக்குடி.